P.R.No: 52 நாள் : 20.11.2017

**வங்கி வாடிக்கையாளர்களுக்கு மாவட்ட ஆட்சியரின்**
**முக்கிய வேண்டுகோள்**

அனைத்து வங்கி வாடிக்கையாளர்களும் தங்களுடைய வங்கி கணக்கோடு ஆதார் எண்ணை இணைக்க வேண்டியது மிகவும் அவசியமாக்கப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. ஆதார் எண் இணைக்கப்படாத வங்கிக் கணக்குகளில் பரிவர்த்தனை செய்ய இயலாது என ஏற்கனவே அரசு அறிவித்துள்ளதால் வாடிக்கையாளர்கள் அனைவரும் வங்கி வணிகத் தொடர்பாளர்கள் மூலமாகவோ அல்லது வங்கிக் கிளைகளை நேரடியாக அணுகியோ ஆதார் அட்டையின் நகலை சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த பணியை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கி வாடிக்கையாளர்களும் விரைவாக முடித்து தங்கள் வங்கி கணக்குகள் முடங்கப்படுவதை தவிர்க்கும்படி மாவட்ட ஆட்சியர் மீண்டும் கேட்டுக் கொள்கிறார்.

20-11-2017

Lead District Manager

COLLECTOR
TIRUNELVELI

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி